## தேர்ச்சி: ஒன்று:-
உலகின் இறைவனின் செயற்பாடுகளை உணர்ந்து கொள்வர்

1

## 1.1. படைப்பின் வழியாக இறைவனை அறிவோம்

1969ல், நிலவில் காலடியெடுத்து வைத்த நீல் ஆம்ஸ்ட்ரோங் அதனை வியந்து திருவிவிலியத்தின் திருப்பாடல்களிலுள்ள பாடலை செபித்து இறைவனைப் புகழ்ந்தார்.

ஆண்டவரே! எங்கள் தலைவரே! உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது! உமது மாட்சி வானங்களுக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது.

(தி.பா. 8:1)



காலங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவன், தம்மைப் பற்றியும், தமது திட்டங்களைப் பற்றியும் மனிதருக்குப் படைப்பின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். உலகில் உள்ள உயிரினங்கள் மனிதன் அழியக்கூடிய செல்வங்களைக் கொண்டு, அழிவில்லாத இறைவனைக் கண்டடைய வேண்டியவனாகின்றான். அத்துடன் மாற்றம் பெறக்கூடிய பொருட்களைக் கொண்டு மாறாத்தன்மையுடயவரை அறியவும் அன்பு செய்யவும் இறுதியில் அவரையே அடைவதற்காக அழைக்கப்பட்டுள்ளான். எனவே படைப்புக்கள் அனைத்தும் இறைவனின் அன்பை எமக்கு வெளிப்படுத்துகின்றன.



இலவச விநியோகத்திற்காக

இயற்கையின் எழில் ''யாவும் பல வண்ணத் தூரிகை கொண்டு இறைவன் எனக்கு எழுதிய அன்புக் கடிதங்கள்.''

- மகாகவி இரவிந்திரநாத் தாகூர்

**உலக ஆரம்பம்**



தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள், 'ஒளி தோன்றுக!' என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார். கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார்.

(தொ.நூ. 1:1-4)

ஏனெனில், கண்ணுக்குப் புலப்படா அவருடைய பண்புகள் - அதாவது, என்றும் நிலைக்கும் அவரது வல்லமையும் கடவுள் தன்மையும் - உலகப் படைப்பு முதல் அவருடைய செயல்களில் மனக் கண்களுக்கு தெளிவாய்த் தெரிகின்றன.

(உரோ. 1:20)

- படைப்புப் பற்றி திருவிவிலியத்தில் தொடக்க நூல் 1:1-31ல் கூறப்படுபவை பற்றி வாசித்து விளங்கவும்.



இலவச விநியோகத்திற்காக

உதாரணமாக வீட்டுத் தோட்டத்திலுள்ள மாமரத்தை அவதானியுங்கள். மாமரம் என்ற பெயரில் பல பகுதிகள் (வேர், கிளை, தளிர், இலை, பூ, காய்) ஒன்றிணைந்துள்ளன. மாமரம் வளர்ந்து, பூத்து உரிய காலத்தில் பலன் தருகின்றது. இதன் இரகசியம் என்ன? மரத்தின் ஒவ்வொரு பகுதியும் ''கொடுப்பதிலும்-பெறுவதிலும்'' ஒருங்கிணைந்து செயற்பட்டு பலனளிக்கும் தன்மையாகும்.

- இத்தன்மையானது தாவர வாழ்வு, மிருக வாழ்வு, மனித வாழ்வு என்பவை அடங்கிய முழுப் படைப்பிற்கும் உரியதொன்றாகும்.

## தாவர வாழ்வின் ஊடாக கொடுக்கும் - பெற்றுக்கொள்ளும் பண்பை விளங்கிக் கொள்வோம்.

படைத்தவரான இறைவன் தனது சொந்த ஒழுங்குமுறையில் தாவரத்தின் இலையை பச்சையம் என்னும் பதார்த்தத்தோடு படைத்துள்ளார். இதன் மூலம் தாவரம் தமது உணவைப் பெற்றுக் கொள்கிறது.

இந்தப் பச்சையமானது சூரிய ஒளி, வளி, நீர் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டினை நிரந்தரமாகவே செய்கின்றது.

- பெற்றுக்கொள்ளும் பண்பு மனிதன் உட்பட முழுப்படைப்பினதும் தன்மையாகும் என்பதை நன்றாக விளங்கிக் கொள்ளவும்.
- வறண்ட நிலமானது ஒரு துளி மழைக்காகவும் ஆகாயத்தை நோக்கி இருக்கின்றது. ஆகாயம் பூமிக்கு மழையைத் தருகின்றது. நிலம் அதனை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கின்றது. நிலம் மீண்டும் அதனை ஆகாயத்துக்குக் கொடுக்கின்றது. ''நீராவியாகுதல்'' என்பது இதுவாகும். ஆகாயம் அதனைப் பெற்றுக்கொள்கின்றது. பின்னர் முகில்கள் உண்டாகின்றன. இந்த நான்கு படி முறைகளும் படைப்பினது அன்பின் செயற்பாடாகும்.
- மரம் காய்ந்த இலைகளை நிலத்துக்குக் கொடுக்கிறது. நிலம் அதனை அன்போடு பெற்றுக்கொள்கின்றது. நிலம் அதனை உரமாக மீண்டும் மரத்துக்குக் கொடுக்கின்றது. மரம் அதனை அன்போடு பெற்றுக்கொள்வதோடு அதிக பலனையும் கொடுக்கின்றது. இது ஒரு அன்பின் செயற்பாடாகும்.



இலவச விநியோகத்திற்காக

படைப்பில் காணப்படும்
மூவொரு இறைவனின் வாழ்வானது
மனிதருக்குள்ளும் இருக்குமெனில்
இவ்வுலகம் நற்பண்புகள் நிறைந்த
இடமாகத் திகழும்.

கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது. என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது. எப்பொழுது நான் கடவுள் முன்னிலையில் வந்து நிற்கப் போகின்றேன்?

(தி.பா. 42:1-2)

ஏனைய படைப்புகளைவிட மனிதனிடத்திலுள்ள விசேட தன்மையானது ''ஆன்மா'' அல்லது ''உயிர்மூச்சு'' என்பதாகும். இந்த ஆன்மாவினால் மனிதன் படைப்பின் இறைவனாகிய தனது உண்மையான தந்தையைக் காண்பதில் எப்பொழுதும் தாகமாயிருக்கிறான்.

இறைவனுடைய சாயலைத் தன்னகத்தே கொள்ள, அவ் இறைசாயலைத் தன்னுடைய வாழ்வின் மூலம் பிரதிபலிக்க மனிதன் தாகமாக இருக்கிறான். பாலைவனத்திலுள்ள மான்கள் ஒரு துளி நீரைத் தேடிச் செல்வது போல மனிதனுடைய உயிர்மூச்சும் எதையாவது தேடும், அது தூய்மையான முழு மகிழ்வையும், அமைதியையும் தேடும்போதுதான் அவன் முழுமுதற் கடவுளைக் கண்டடைவான்.



இலவச விநியோகத்திற்காக



**பின்வரும் பாடலைப் பாடுவதற்கு முயலுங்கள்.**

வெளிச்சமாக்கி இரவு பகலை
விரைவாய் முதல் நாள் ஏற்படுத்தி
ஆகாய விரிவை உண்டாக்கி
அமைத்தார் இரண்டாம் நாளினிலே

மூன்றாம் நாளில் நீர் பிரிய
முளைத்தது தரையில் புல் பூண்டு
செடி கொடி மரங்கள் கனிகளையும்
சிறப்பாய் இருக்கச் செய்தாரே

நான்காம் நாளில் வானமதில்
நலமாய் உதிக்கும் சூரியனும்
சந்திர கோடி நட்சத்திரங்கள்
சர்வ தயாபரன் தான் படைத்தார்

ஐந்தாம் நாளில் நீர் வாழும்
அனைத்து இன விலங்குகளும்
ஆகாயப் பறவைகளையும்
அமைத்தார் அந்நல் நாளினிலே

ஆறாம் நாளில் ஊர்ந்து வாழும்
அனைத்து பூச்சி இனங்களும்
அள்ளிய மண்ணில் ஆதாமை
அணைத்து ஊதி உயிர் கொடுத்தார்

ஏழாம் நாளில் பூமியிலே
எல்லாம் நன்றே முடிந்ததென்று
ஓய்ந்திருந்து அந்நாளை
உயர்வாய் ஆசீர் வதித்தாரே.

(மாணவ அறிவிற்காக இயற்றப்பட்ட பாடல்)

- படைப்புப் பற்றிய இப்பாடல் மூலம் உம் எண்ணத்தில் தோன்றும் உணர்வலைகளை ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.



இலவச விநியோகத்திற்காக

**குழுச் செயற்பாடு:**

**ஐந்து பேர் கொண்ட குழுவில் கீழ்வரும் விடயங்களைப் பற்றி கலந்துரையாடுங்கள்.**

- இவ்வுலகின் நிகழ்வுகளான விதைகள் முளைத்தல், மலர்கள் மலர்தல், காய்ந்து போதல் அதன் விளைவுகள்.
- மிருகங்களும் இவ்வாறே பிறக்கின்றன, வாழ்கின்றன - இறப்பு.
- இயற்கையில் மின்னல், இடி, காற்றின் சுழற்சி, புயல், மழை.
- பாலைவனத்தில் வெப்பம், அதிகூடிய வெப்பநிலை.
- மனித பிறப்பு, அதன் வளர்ச்சிப்படிகள், அவன் கொள்ளும் உறவுகள், மனித மாண்பு, ஆன்மாவின் முடிவற்ற தன்மை, உடலின் அழிவு.

நம்மைச் சுற்றி
நாம் காணும் அழகு, ஒழுங்கமைப்பு
இவற்றின் வாயிலாக கடவுளைப் பற்றிக்
கூறும் உலகு, இவை தற்செயலாக உருவானதல்ல்
மாறாக, ஒப்பில்லா ஞானமுடன் வாழும் ஒருவரால்
தப்பில்லாது உருவாக்கப்பட்டவை எனக் கூறுகின்றது.
இறை சாயலில் படைக்கப்பட்டு,
இறைவனை அறியவும் அன்பு செய்யவும்
படைக்கப்பட்டுள்ள மனிதன்,
இறைவனைக் கண்டடைய விரும்பி,
அதற்கான வழிகளைக் கண்டுள்ளான்.
இக்கண்டடையும் வழிவகைகளே இறை இருப்பிற்குத் தக்க ஆதாரங்களாகும்.
படைக்கப்பட்ட உலகின் வழியாகவும்,
மனிதர்கள் வழியாகவும் இறைவனைக் கண்டுகொள்ள முடியும். மனிதனின்
ஆன்ம தாகம் இறைவனைக் காண்பதும்
இறை நிறைவை நோக்கிய ஈர்ப்பும் ஆகும்.

கத்தோலிக்க திருச்சபையின்
மறைநூல் # 31, 32.



இலவச விநியோகத்திற்காக

இவ்வுலகிலுள்ள உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்தையும் இறைவா, மனிதனுக்காக நீர் படைத்தீர். அதனால், மனிதன் உமக்காக வாழும்வரை திருப்தியடைய மாட்டான்.

- புனித அகுஸ்தீனார்.

இவ்வாறாக, நாம் வாழும் உலகையும்,
அதன் எதிர்பார்ப்புக்களையும், ஏக்கங்களையும்,
பன்முறையும் உயிர்த்துடிப்புடன் வெளிப்படும் அதன் இயல்புப் பண்பையும்
நாம் அறிந்து உணர வேண்டும்.

2ம் வத்திக்கான் சங்க ஏடு.
இன்றைய உலகில் திருச்சபை # 04

| தற்கால மனிதனின் பலம் | தற்கால மனிதனின் பலவீனம் |
|---|---|
| 1. செல்வத்திலும் பலத்திலும் பொருளாதாரத்திலும் வளர்ச்சி. | 1. பட்டினி, ஏழ்மை, படிப்பறிவின்மை. |
| 2. சுதந்திரமடைந்த மனிதன். | 2. புதிய சமூக, உளநிலைக்கு அடிமையாதல். |
| 3. உலக ஒருமைப்பாட்டின் ஐக்கியத்தின் உணர்வு. | 3. வெவ்வேறு பிரிவினைகளைக் காணக்கூடியதாய் உள்ளது. |
| 4. தொடர்பாடல் வளர்ச்சி. | 4. கருத்துப் பரிமாற்றம் இன்மை. |
| 5. பௌதீக வளத்தில் முன்னரை விட முழுமையான உலக முன்னேற்றம். | 5. ஆன்மீக வாழ்வில் அக்கறையின்மை. |



இலவச விநியோகத்திற்காக

**குழுச் செயற்பாடு:**

1. படைப்பின் மூலம் இறை மகிமையைக் காணும் நாம் இறைவனை எவ்வாறு சந்திப்பது?
2. இறை அருளும் உதவியும் இன்றி இறைவனை சந்திக்க முடியுமா?
3. இறைவனைத் தேடுவதற்கு பூரண விருப்பம், தூய்மையான இதயம், அயலவர் மட்டில் கொள்ளும் அன்பு என்பவை அவசியமா?
4. 'மனிதருக்குள் இருக்கும் தாகம் இறைவனைச் சந்தித்தல்.' இது மனிதனுக்குள் இருக்கும் இயல்பூக்க செயற்பாடுதானா?

- **மேற்கூறப்பட்டவைகளை குழுக்களுக்கூடாக அட்டவணைப்படுத்துக. மாணவர்கள் தம் கருத்துக்களை முன்வைக்க ஆசிரியர் உதவுதல் வேண்டும்.**

- **பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. இறைவனை நாம் கண்டடைய எம்மில் இருக்க வேண்டியவை எவை?
2. இறைவன் நித்தியமானவர் என்பதை ஏற்றுக்கொள்கின்றீரா? காரணம் தருக.
3. இறைவனைத் தேடிக் கண்டடைய நீர் உம் வாழ்வை எவ்வாறு மாற்றியமைப்பீர்?
4. தரம் 10 கத்தோலிக்க திருமறை பாடப்புத்தகத்தில் 19ம் பாடத்தில் உள்ளவாறு புனித பிரான்சிஸ் அசிசியார் இயற்கை மூலம் எவ்வாறு இறைவனைக் கண்டடைந்தார் என விளக்குக.

**என் வாழ்க்கைக்கு...**

இறைவனின் படைப்பிலே மனிதனே உயர்ந்தவன். அனைத்தும் அவனுக்காகவே படைக்கப்பட்டன. ஒரு கிறிஸ்தவ மாணவராகிய நீர் உமக்குள்ள ஆற்றல்களைப் புரிந்துகொண்டு, உம்மைச் சூழவுள்ள உலகைப் பயன்படத்தக்க வகையில் விருத்தி செய்வது, அதனைப் பாதுகாப்பது இறை சித்தம் என்பதை நினைவிற்கொண்டு செயற்பட வேண்டும்.



இலவச விநியோகத்திற்காக

அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை.

(யோவா. 1:3)

● இவ்விவிலிய வார்த்தை பற்றிய உமது கருத்தைப் பயிற்சி நூலில் எழுதுக.

ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும் விண்ணுலகையும் உருவாக்கிய பொழுது, மண்ணுலகில் நில வெளியின் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை வயல்வெளியின் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை. ஏனெனில் ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை. மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை. ஆனால் நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும் நனைத்தது. அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.

(தொடக்க நூல் 2:4-7)

● **மேற்கூறிய திருவிவிலியப் பகுதியை வரைதற்தாளில் எழுதி உமது அறையில் தொங்கவிடவும்.**



இலவச விநியோகத்திற்காக